# நிறுமச் சட்டம் மற்றும் செயலர் நடைமுறைகள்
COMPANY LAW AND SECRETARIAL PRACTICE

26
அத்தியாயம்

## நிறுமச் சட்டம், 2013
COMPANIES ACT 2013

சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

-- குறள் 311

**பொருள் :**

சிறப்பைத்தருகின்ற பெருஞ் செல்வத்தைப் பெறுவதாக இருந்தாலும், பிறர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலே மாசற்றவரின் கொள்கையாம்.

### கற்றல் நோக்கங்கள்

**இந்த அத்தியாயத்தைக் கற்றபின், மாணவர்களால்**

- நிறும சட்டம் மற்றும் நிறுமத்தின் சட்டத்தின் தர்க்கங்கள் பற்றிய வளர்ச்சிகள்.
- கம்பனியின் அடிப்படை யோசனைகள்
- விளம்பரதாரர்களின் பங்கு
- பங்குகளின் மற்றும் கடன் பத்திரங்களின் பொருள்.
- பங்கு சான்றிதழ் மற்றும் பகிர்வு உத்தரவுகளை அடிப்படை யோசனை ஆகியவற்றை புரிந்துக் கொள்ள இயலும்.

### கற்றல் நோக்கங்கள்


26.01 இந்திய நிறுமச் சட்டத்தின் வரலாறும் பரிணாமமும்
26.02 நிறுமங்கள் சட்டம் 2013
26.03 நிறுமத்தின் பொருள் மற்றும் இலக்கணம்
26.04. நிறுமத்தை உருவாக்குதல்
26.05. பங்கு மற்றும் பங்கு முதல்
26.06. பங்குகள், ஊக்கப் பங்குகள், உரிமைப் பங்குகள் – வெளியீடுதல்
26.07 பங்குச் சான்றிதழ் மற்றும் பங்குரிமை ஆணை.
26.08 பங்கு மற்றும் பங்குத் தொகுதியும்
26.09 கடன் பத்திரம்
26.10 பங்குகளுக்கும், கடன் பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடுகள்


நிறும அமைப்புகளை உருவாக்கி வர்த்தகம் செய்யும் முறை பதினேழாம்நூற்றாண்டிலேயே பின்பற்றப்பட்டது எனக் கூறலாம்.

இந்த அத்தியாத்தில் இந்திய நிறுமச் சட்டம் 2013ன் பொது அம்சங்களை உள்ளடக்கியது. மேலும் நிறுமத்தின் பொதுவான ஆவணங்களான அமைப்பு முறையேடு. செயல்முறை விதிகள் மற்றும் தகவல் அறிக்கை போன்றவற்றை ஆய்வுசெய்தல். மேலும் இந்த அத்தியாயத்தில் பங்குகள் மற்றும் கடனீட்டு பத்திரங்கள் முக்கிய அம்சங்களை உள்ளடக்கியது. இந்த அத்தியாயத்தை படித்த பின்னர் இந்திய நிறுமச் சட்டத்தின் வரலாற்று பரிணாம வளர்ச்சியை புரிந்துகொள்வதுடன் 2013ல் திருத்தியமைக்கப்பட்ட நிறுமச் சட்டத்தின் அடிப்படை பங்குகளையும், அதன் முக்கிய அம்சங்களையும் அறிந்துக் கொள்ளலாம்.

ஏற்கனவே கூறியவாறு வர்த்தகத்தில் "நிறுமம்" மற்றும் "சங்கம்" (கார்ப்பரேஷன்) என்ற கருத்து புதியது அல்ல. ஏனெனில் கி.மு.நான்காம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட "அர்த்தசாஸ்திரம்" காலத்தில் இந்த வார்த்தைகள் கையாளப்பட்டுள்ளன. மேலும் வியாபார வளர்ச்சிக்கும் தேவைக்கும் தகுந்தாற் போல் காலப் போக்கில் அதன் வடிவம் சீரமைக்கப்பட்டது.

நிறும வடிவமைப்பைக் கொண்ட வாணிபம் பிற வணிக நிறுமங்களான தனியார் வாணிபம்,கூட்டு வாணிபம் போன்றவற்றிலிருந்து மாறுப்பட்டு பல நன்மைகளை பெறுகின்றன.

இந்த நிறுமம் என்ற வார்த்தை வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிரந்தர வாழ்வுபோன்ற இயல்புகளை உள்ளடக்கியது.